**தலைப்பு 299 – இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 299 – இலங்கையின் தேசிய புலமைச் சொத்து திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 செப்தம்பர் 08 ஆந் திகதி தேசிய புலமைச் சொத்துப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 28.75 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இதில் ரூபா 28.15 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 0.60 மில்லியன் அதாவது 2.08 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

---

வியாபாரக் குறிகளை சர்வதேச ரீதியில் பதிவு செய்வதற்கான மெட்ரிட் அமைப்பு நிகழ்ச்சி நிரலுக்கு நுழையும் செயற்திட்டத்திற்காக வரிசை அமைச்சினால் ரூபா 38.00 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும்

அதில் ரூபா 37.96 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 0.04 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்குரிய 29901 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 3.00 | 2.73 | 1.20 | 2.03 | 10.00 | 7.33 |

### 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்படாமை

அலுவலகத்தினால் கீழே காண்பிக்கப்படும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டல் |
| குழுக் கூட்ட அறிக்கை | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.3(அ) வழிகாட்டல் |

| | |
|---|---|
| கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 வழிகாட்டல் |
| கேள்வி திறத்தல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.3.6 வழிகாட்டல் |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

2016 பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் வியாபாரக் குறிகளை சர்வதேச ரீதியில் பதிவு செய்வதற்காக மெட்ரிட் அமைப்பு நிகழ்ச்சிநிரலுக்கு நுழையும் செயற்திட்டமொன்று 2016 சனவரி 01 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் 31 வரையான இரண்டு காலப்பகுதியில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்கான ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இச் செயற்திட்டத்திற்காக தேவையான பௌதீக வசதிகளை கட்டியெழுப்புவதின் கீழ் செயற்திட்டம் இறுதி வரை வர்த்தகமன்றங்களுக்குரிய கட்டிடங்களின் நிலமாடி வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 2016 மே 15 ஆந் திகதி முதல் 2018 மே 14 வரையான இரண்டு வருட காலப்பகுதிக்காக மாதமொன்றுக்கு ரூபா 175,000 வாடகை இவ்வளவு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. எனினும் இந்த வளவில் 2017 செப்தெம்பர் 08 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் 2017 மே வரை வாடகையாக ரூபா 2.43 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இச்செயற்திட்டத்திற்காக தேவையான அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 3.88 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பேணிச் செய்வதற்கு மேற்குறித்த வளவினை பயன்பாட்டிற்கு எடுக்காமை பேரில் அப்பொருட்களிலிருந்து அதிகளவு பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்தது.

(இ) இச் செயற்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக தேவையான சேர்வர்(server) இயந்திரத்தை கொள்வனவு செய்தல் முறைமையை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கும் இடையே 2016 திசெம்பர் 30 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறித்த கொள்வனவு, ஸ்தாபித்தல் மற்றும் பராமரிக்கும் செயற்பாட்டிற்காக ரூபா 32.50 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதி முதல் 06 மாதங்களுக்குள் கொள்வனவு நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் 2017 யூன் 28 ஆந் திகதி வரையிலும் குறித்த கொள்வனவிற்காக விலை கோரல்களோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

29901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 139,410 ஆக இருந்ததுடன் அது 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலவி வந்தது. அந் நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு அலுவலகத்தால் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 செப்தெம்பர் 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம், அலுவகத்தின் அமைப்பு வரைபடம், பதவியணியினர் விபரம், பாதீடு, உள்ளக கணக்காய்வுத் திட்டம் மற்றும் கொள்வனவுத் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்பாக போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

2000 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,126,957 கிரயத்திலான மோட்டார் வண்டியொன்று மீளாய்வாண்டின் ஆரம்பம் முதல் 2017 செப்தம்பர் 08 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

## 3.6 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2003 இன் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் அதிகாரச் சட்டம் | இணை முகவர்களை பதிவு செய்வதற்கு 175(5) ஆம் பிரிவின் பிரகாரம் செல்லுபடிக் காலம் முடிவடைந்து 06 மாதங்களுக்குள் |

| | | |
|---|---|---|
| | | நிர்ணயிக்கப்படும் மிகை கட்டணத்தின் பேரில் பதிவினை புதுப்பிப்பதற்கு இயலுமை காணப்படுகின்றது. 58 ஆம் கட்டளையின் 10(ii) இன் பிரகாரம் பதிவுக்காலம் முடிவடைந்து 02 வாரங்களில் புதுப்பித்தல் கட்டணங்கள் செலுத்தப்படாவிட்டால் பெயர்ப் பட்டியலில் இருந்து நீக்கல் அகற்றப்பட வேண்டியிருப்பதால் இந்த வித்தியாசம் காரணமாக 58 ஆம் கட்டளையின் 10(ii) பிரிவின் பிரகாரம் பெயரை நீக்க முடியாமல் இருந்தது. |
| (ஆ) | 2006 இன் 01 ஆம் இலக்க புலமைச் சொத்து ஆதனக் கட்டளை | 58 ஆம் கட்டளையின் கீழ் 11 ஆம் பிரிவின் பிரகாரம் இணை முகவர்களின் பெயர் பட்டியலைப் பிரசித்தப்படுத்துவதற்கும் இணை முகவர்களை, முகவர் பட்டியலில் இருந்து நீக்குவது தொடர்பாக பிரசித்தப்படுத்துவதற்கு பணிப்பாளர் நாயகம் செயற்பட வேண்டிய போதிலும் அகற்றப்பட்ட இணை முகவர் பதிவேடு இணையத் தளத்தில் காண்பிக்கப்படா திருந்ததுடன் அங்கிருந்த இணை முகவர்- பதிவேட்டின் செல்லுபடிக் காலம் கடந்த இணை முகவர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தனர். |
| (இ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதி 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | அலுவலகத்திற்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் தெரிவு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

**கணணிகள், உபபாகங்கள் மற்றும் தளபாட உபகரணங்கள் கொள்வனவு**

மெட்ரிட் செயற்திட்டத்தின் செயற்பாடுகளுக்காக ரூபா 1.90 மில்லியன் செலவு செய்து 05 மடிக் கணணிகள், 08 கணனிகள், 06 அச்சிட்டு இயந்திரங்கள் மற்றும் ரூபா 1.82 மில்லியன் செலவு செய்து தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்குறித்த பொருட்கள் 2016 திசெம்பர் 28 ஆந் திகதிக்கு முன்னர் வழங்குமாறு வழங்குனருக்கு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவை 2016 திசெம்பர் 30 ஆந் திகதி முதல் 2017 மார்ச் 27 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் கிடைத்திருந்தன.

(ii) மடிக்கணனிகள் தவிர எஞ்சிய பொருட்கள் விவரக்குறிப்புகளுக்கு இணங்குவதாக தொழில்நுட்ப மதிப்பிட்டுக் குழு உறுப்பினர் ஒருவரினால் 2016 திசெம்பர் 28 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரியதாக இருந்தது.

(iii) கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் ரூபா 1.28 மில்லியன் பெறுமதியான 05 அச்சிட்டு இயந்திரங்கள், 04 மடிக் கணனிகள், 04 கணனிகள் மற்றும் ரூபா 1.65 மில்லியன் பெறுமதியான தளபாட உபகரணங்களும் 2017 யூன் 20 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(iv) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.10 வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்த தொகையில் 10 சதவீதமான செயலாற்றல் பிணைப் பொறுப்பு பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) வழிகாட்டலின் பிரகாரம் குறித்த நிறுவனத்துடன் முறையான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) இக்கொள்வனவிற்காக நிதி ஏற்பாடு போதியளவில் உள்ளதா என உறுதிப்படுத்தாததன் காரணமாக 05 மடிக் கணனிகளுக்கான ரூபா.927,500 தொகை 2017 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாடுகளிலிருந்து கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்திருந்தது.

## 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) இணை முகவர்களை பதிவு செய்தல் மற்றும் நிர்வாகம்

(i) 2006 மே 17 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் இணை முகவர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பதிவு செய்வதற்கான பரீட்சையை தம்மால் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியினால் அல்லது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உதவியுடன் நடாத்துவதற்கு பணிப்பாளர் நாயகத்திற்கு முடியுமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையில் குறித்த பரீட்சையை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவர் மாத்திரம் இணை முகவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

(ii) இணை முகவர்களை பதிவு செய்தல் கட்டணத்தை விட புதுப்பித்தல் கட்டணம் கூடிய பெறுமதியொன்றைக் கொண்டிருந்ததால் பதிவுசெய்யப்பட்ட இணைமுகவர் 03 ஆண்டுகளுக்கு பின்னர் பதிவினை புதுப்பிப்பதற்கு பதிலாக மீண்டும் புதிதாக பதிவு செய்து கொள்ளும் போக்கொன்று உருவாகியிருந்தது. ஆதலால் கட்டணங்கள் திருத்தம் செய்யப்படுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(iii) இணை முகவர்களின் ஊடாக அலுவலத்திற்கு கிடைக்கும் வியாபார ஆக்கவுரிமை பத்திரங்கள் மற்றும் தொழில்நுட்ப திட்டங்கள் பதிவு செய்வதற்குரிய ஆவணங்களின் சரியான மற்றும் முழுமையானது தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அவர்கள் ஊடாக கிடைக்கும் கடித ஆவணங்களில் குறைபாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு நேர்வதாலும் அது அலுவலகத்தின் செயற்திறன் மற்றும் இணை முகவர்களை நியமிக்கும் நோக்கம் தொடர்பிலும் பாதகமான வகையில் தாக்கமளித்திருந்தது.

**(ஆ) வருமான குறியீடொன்று பெற்றுக் கொள்ளல்**

புலமைச்சொத்து நிதியத்திலிருந்து உழைத்த வருமானத்தில் 1/3 பகுதி திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்காக வருமானக் குறியீடொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையில் முடியாதிருந்தது.

## 3.9 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 12 | 06 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 66 | 45 | 21 |
| (iv) | ஆரம்ப நிலை | 15 | 14 | 01 |
| | மொத்தம் | 98 | 70 | 28 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

அலுவலகத்தின் வியாபாரத்திற்குரிய ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் மற்றும் தொழில்நுட்ப திட்டங்கள் என்பவற்றை பதிவு செய்வதற்கான கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ளும் புலமைச்சொத்து தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தருக்குரிய 16 வெற்றிடங்கள் காணப்பட்டன. இவ் வெற்றிடங்கள் அலுவலகத்தின் செயலாற்றல் தொடர்பாக பாதகமான வகையில் தாக்கம் செலுத்தியிருந்தது.